FORB Learning Platform

# எழுத்துப்பிரதி : மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்: உங்களது மதம் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்கானஅல்லது மாற்றுவதற்கான உரிமை

உங்களது மதம் அல்லது நம்பிக்கையை சுதந்திரமாகக் கொண்டிருப்பதற்கான, பேணுவதற்கான, மாற்றுவதற்கான அல்லது விட்டுச் செல்வதற்கான உரிமையே மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் முதலாவது முக்கிய பரிமாணம் ஆகும். இது உங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளைப் பற்றியதுடன், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உட்பரிமாணம் என்று அறியப்படுகிறது. உங்களது மதம் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமை அறுதியான உரிமையொன்றாகும், அதாவது சர்வதேச சட்டத்தின்படி, இந்த உரிமையினை ஒருபோதும் மட்டுப்படுத்த முடியாது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக, முஸ்லீமாக, பஹாயாக, யெசிடியாக அல்லது நாத்திகராக இருந்தாலும், நீங்கள் சிங்கப்பூர், சுவீடன் அல்லது சூடானில் வாழ்ந்தாலும், அங்கு சமாதானம் நிலவியபோதும் அல்லது போர் காணப்படுகின்றபோதிலும், மதத் தலைவர்கள் அல்லது அரசியல் தலைவர்கள் என்ன சொல்கின்றபோதிலும்- அதை எதனையும் பொருட்படுத்தாது- உங்களுக்கும் ஏனைய ஒவ்வொருவருக்கும் உங்களுடைய நம்பிக்கைகளைப் பேணுவதற்கான மற்றும் அனுட்டிப்பதற்கான அல்லது அவற்றை மாற்றுவதற்கான அல்லது நம்பிக்கையற்ற ஒருவராக இருப்பதற்கான உரிமை உண்டு.

சந்தேகத்திற்கிடமற்றவகையில், இந்த முழுமையான உரிமை பல நபர்களுக்கு மறுக்கப்படுவதுடன், அவர்கள் தங்கள் மதம் அல்லது நம்பிக்கைகளின் காரணமாக அரசாங்கங்களால், குடும்ப உறுப்பினர்களால் அல்லது அவர்களின் சமுதாயத்தில் உள்ள குழுக்களால் தண்டிக்கப்படுகிறார்கள் அல்லது தாக்கப்படுகிறார்கள்.

சில அரசாங்கங்கள் குறிப்பிட்ட மதங்கள் அல்லது நம்பிக்கைகளைத் தடை செய்கின்றன. ஃபாலுன் காங் என்பது சீனாவில் தடை செய்யப்பட்டுள்ள பௌத்த நம்பிக்கை மற்றும் நடைமுறையின் ஒரு வடிவமாகும். ஃபாலுன் காங் நம்பிக்கையை பின்பற்றியவர்கள், அவர்களுடைய நம்பிக்கையினை கைவிடுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்துவதனை இலக்காகக் கொண்ட சிறைவாசம், சித்திரவதை, கட்டாய உழைப்பு மற்றும் மறு கல்வி ஆகியவற்றை எதிர் கொண்டுள்ளனர்.

எரித்திரியாவில், அரசு அங்கீகாரம் பெற்ற மதங்கள் நான்கு மாத்திரமே உள்ளன. அங்கு, பெந்தேகோஸ்தே கிறிஸ்தவர்கள் மற்றும் யெகோவாவின் சாட்சிகள் போன்ற அங்கீகரிக்கப்படாத மதங்களைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு வழிகளில் கடுமையாக தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.

மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான உரிமை மீறல்களுக்கான மிகப் பொருத்தமான உதாரணம் வெறுப்புக் குற்றங்கள் ஆகும். வெறுப்புக் குற்றங்களில் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது மத அடையாளங்கள் அல்லது நம்பிக்கைகள் காரணமாக இலக்கு வைக்கப்படுகின்றனர். அவர்கள் குறிப்பிட்டதொரு மதம் அல்லது நம்பிக்கையினைக் <u>கொண்டிருக்கின்றமையினால்</u> தாக்கப்படுகின்றனர்.

பிரான்சில், 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 336 சம்பவங்களுடன், முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல், துன்புறுத்தல் அல்லது குற்றவியல் சேதம் போன்ற வெறுப்புக் குற்றங்கள்

250% ஆல் அதிகரித்துள்ளன. யூத சமூகத்திற்கு எதிரான வெறுப்புக் குற்றங்களின் அளவு 715 வெறுப்புக் குற்றங்களுடன் பதிவாகியுள்ளது.

மெக்ஸிகோவின் சில கிராமப்புற பகுதிகளில், பாரம்பரிய மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை பாதுகாக்க விரும்பும் சமூகத் தலைவர்களால் புரோட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் வன்முறைக்கு ஆளாகிறார்கள் அல்லது தங்கள் நிலத்திலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

பல நாடுகளில், மத அடையாளம், தேசிய அடையாளம் மற்றும் அரசின் அடையாளம் ஆகியவை நெருக்கமாக பின்னிப்பிணைந்துள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில், நாத்திகர்கள் உட்பட மத சிறுபான்மையினர் மற்றும் பெரும்பான்மை மதத்தை விட்டுவிலகுகின்ற மக்கள் தேசத்திற்கு விசுவாசமற்றவர்களாகவோ அல்லது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ பார்க்கப்படலாம்.

ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையை விட்டுவிலகுவதற்கான முழுமையான உரிமை பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் மத சுதந்திரம் தொடர்பான சட்டங்கள் உள்ளன. இருப்பினும், இந்த சட்டங்கள் இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவம், பௌத்தம், கன்பூசியனிசம் மற்றும் இந்து மதம் போன்ற சில மதங்களைப் பின்பற்றும் மக்களை மட்டுமே பாதுகாக்கின்றன. நாத்திகம் பாதுகாக்கப்படவில்லை. முஸ்லீம் பின்புலத்தினைக் கொண்ட அலெக்ஸ் ஆன் என்பவர் தனது 30 ஆவது வயதில் “கடவுள் இல்லை” என்று எழுதியதற்காகவும், முகப்புத்தகத்தில் நாத்திகத்திற்கான ஒரு பக்கத்தைத் தொடங்கியதற்காகவும் 2½ வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்ததுடன், 11,000 அமெரிக்க டாலர் அபராதத்தையும் எதிர்கொண்டார்.

மத வெறுப்பு அல்லது விரோதத்தை நோக்கமாகக் கொண்டத் தகவல்களை பரப்பியமை, இணையத்தில் அவதூறான செய்தியொன்றைப் பரப்பியமை மற்றும் நாத்திகத்தைத் தழுவுவதற்கு ஏனையோருக்கு அழைப்பு விடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் ஆன் மீது முன்வைக்கப்பட்டன. ஆன் முகப்புத்தகத்திலுள்ள தனது பக்கத்தில் பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தாலும், அவர் கோபமடைந்த கும்பல்களால் தாக்கப்பட்டதுடன் அவரது சமூகத்தால் நிராகரிக்கப்பட்டார்.

ஈரானில், இஸ்லாத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறியவர்கள் குறிப்பாக பதிவு செய்யப்படாத வீட்டு தேவாலய வழிபாடுகளில் ஈடுபட்டால் கடுமையானத் தண்டனையை சந்திக்க நேரிடும். ஜூலை 2017 இல், “தேசிய பாதுகாப்புக்கு எதிராக செயல்பட்டமை” என குற்றம் சாட்டப்பட்டு, மத மாற்றம் செய்துகொண்ட நான்கு நபர்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் மூன்று பேருக்கு நற்கருணை இரசம் அருந்தியதற்காக முன்னர் 80 கசை அடி தண்டனையும் வழங்கப்பட்டிருந்தது, ஏனெனில், ஈரானில் முஸ்லிம்கள் மது அருந்துவது சட்டவிரோதமானது என்பதுடன் அரசாங்கம் அவர்களை இன்னும் முஸ்லிம்களாகவே கருதுகிறது.

பெரும்பாலும் அரசியல் மற்றும் மதத் தலைவர்கள், புனித நூல்கள் அல்லது மதச் சட்ட மரபுகள் குறித்த தங்கள் பொருட்கோடலைப் பயன்படுத்தி, பெரும்பான்மை மதத்தை விட்டு விலகியமைக்காக அல்லது சில குழுக்களைச் சேர்ந்திருப்பதற்காக நபர்கள் மீது விதிக்கப்படுகின்ற தடைகளையும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தண்டனைகளையும் நியாயப்படுத்துகின்றனர். இத்தண்டனைகளுள், மரண தண்டனை, சிறைவாசம், வேலை இழப்பு அல்லது திருமணத்தை ரத்து செய்தல் மற்றும் பிள்ளைக்கான பாதுகாவல் உரிமையினை இழத்தல் ஆகியவை அடங்கும். சவூதி அரேபியா, பாகிஸ்தான் உள்ளிட்ட முஸ்லீம் பெரும்பான்மையைக் கொண்ட பல நாடுகளில் இஸ்லாத்தை விட்டுவிலகுகின்ற உரிமை தொடர்பில் இத்தகைய சட்ட மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறெனினும், இது தவிர்க்க முடியாததொன்றல்ல. உதாரணமாக, சியரா லியோனில் உள்ள மக்கள்தொகையினரில்

முஸ்லிம்கள் 70% வீதமாகவும், கிறிஸ்தவர்கள் 20% ஆகவும் உள்ளனர். இங்கு மதம் மிக பொதுவான விடயமாக இருந்தாலும், அது அரசியல் மயமாக்கப்படவில்லை என்பதுடன், அங்கு மதமாற்றங்கள் இருவழிகளிலும் இடம்பெறுகின்றமை பொதுவான விடயமாகும்.

இவ்வகையான பிரச்சினைகள் முஸ்லீம்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல. மத்திய ஆபிரிக்க குடியரசின் சில பகுதிகளில், பாலாக்கா எதிர்ப்பு போராளிகள் என அழைக்கப்படுபவர்கள், முஸ்லீம் சிறுபான்மையினரை கிறிஸ்தவர்களாக மாறுமாறுக் கட்டாயப்படுத்தி மரண அச்சுறுத்தல்களை விடுக்கின்றனர். இந்தியாவில் பல மாநிலங்கள், மதத்தை மாற்றுவதற்கான உரிமையை மட்டுப்படுத்துகின்ற சட்டங்களை, உதாரணமாக, மதத்தை மாற்றுபவர்கள் அரச நிறுவனங்களின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றதான சட்டங்களைக் கொண்டுள்ளன.

அத்துடன், அரசாங்கங்கள் மட்டுமே உரிமையை மீறுவதில்லை. இந்தியாவில் ஏற்பட்டுள்ள பல தீவிரமான வன்முறை வெடிப்புக்களின்போது, சில சமயங்களில் இடம்பெறுகின்ற வன்முறை அச்சுறுத்தலின் கீழான மத மாற்றங்கள் உள்ளடங்கலாக இந்து தேசியவாத குழுக்கள் கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் சமூகங்களைத் தாக்கியுள்ளன. சில சந்தர்ப்பங்களில், வன்முறையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவதற்கு முன்பு மதமாற்றம் செய்யப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மதங்களை பின்பற்றும் மக்கள் மாத்திரம் பிரச்சினைகளை எதிர்கொள்வதில்லை. மதக் கருத்துக்களை, அல்லது மதத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவை விமர்சிக்கும் நபர்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்ளக்கூடும். அண்மைய ஆண்டுகளில், பங்களாதேஷில் பல பதிவர்கள் மதக் கருத்துக்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் அரசினை விமர்சித்ததற்காக தீவிரவாதக் குழுக்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர். துரதிஷ்டவசமாக, இவ்வன்முறை தீவிரவாதக் குழுக்களைத் தடுப்பதற்கான பங்களாதேஷ் அரசாங்கத்தின் முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை. சில அரசாங்கங்கள் மதக் கருத்துக்களை விமர்சிக்கும் நபர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டிக்கத் தவறிவிடுகின்றன. இம் மௌனமானது, வன்முறை நியாயப்படுத்தத்தக்கது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்ற செய்தியை அனுப்புகிறது.

மதம் அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரம் சர்வதேச மட்டத்தில் மிகவும் சர்ச்சைக்குரியது. உண்மையில், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் இது தொடர்பில் புதிய சமவாயம் அல்லது பிரகடனமொன்றிற்காக உடன்பட்டுக் கொள்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மதத்தை மாற்றுவதற்கான உரிமை மிகவும் பலவீனமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தின் மொழிப் பிரயோகம் பலவீனமானதாய் காணப்படுகின்றபோதிலும், அச்சமவாயத்தினை எவ்வாறு பொருட்கோடல் செய்ய வேண்டுமென்பது தொடர்பாக நாடுகளுக்கு ஆலோசனை வழங்குவதனைப் பணியாகக் கொண்டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் குழு, "மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான அல்லது தழுவிக்கொள்வதற்கான சுதந்திரமானது, ஒருவருடைய தற்போதைய மதம் அல்லது நம்பிக்கையினை வேறொன்றினால் பதலீடு செய்வதற்கான உரிமை அல்லது நாத்திக எண்ணங்களை தழுவிக் கொள்வதற்கான உரிமை, அதேபோல ஒருவருடைய மதம் அல்லது நம்பிக்கையினைத் தக்கவைத்துக் கொள்வதற்கான உரிமை உள்ளடங்கலாக மதம் அல்லது நம்பிக்கையொன்றினைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தினையும் அத்தியாவசியமாக உள்ளடக்குகின்றது."

சுருக்கமாக கூறுவதாயின்- உங்களது மதம் அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமை முழுமையானது. இது எந்த சூழ்நிலையிலும் மட்டுப்படுத்தப்பட முடியாதது. ஆனால், சில அரசாங்கங்கள் இவ் உரிமையை மட்டுப்படுத்துகின்றன என்பதுடன் பல சந்தர்ப்பங்களில் சமூகத்தில் உள்ள குடும்பங்கள் அல்லது

குழுக்கள், தங்களது மதம் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்காக அல்லது அவற்றை மாற்றுவதற்காக நபர்களை வெவ்வேறு வழிகளில் தண்டிக்கின்றன.

மதம் அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமை பற்றிக் குறிப்பிடுகின்ற மனித உரிமை ஆவணங்களின் உரைப்பகுதிகள் உள்ளடங்கலாக அவ் உரிமை பற்றிய மேலதிகத் தகவல்களை நீங்கள் வலைத்தளத்தில் உள்ள பயிற்சி ஆவணங்களில் காணலாம்.

ஆக்க உரிமை: SMC 2018